தமிழ்நாடு அரசு,

**தென்காசி மாவட்டம் - அச்சன்புதூர் முதல்நிலை பேரூராட்சி**

**ந.க.எண். 17 / 2025** **மின்னணு ஒப்பந்தப்புள்ளிஅறிவிப்பு** **நாள் : 30.04.2025**

தென்காசி மாவட்டம் அச்சன்புதூர் முதல் நிலை பேரூராட்சியில் 2025-2026ஆம் ஆண்டு கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.385.45 இலட்சம் மதிப்பீட்டில் அச்சன்புதூர் முதல்நிலை பேரூராட்சி பகுதியில் சிமிண்ட் சாலை, வாறுகால் மற்றும் சிறுபாலம் அமைத்தல் பணியினை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

1) ஒப்பந்தப்புள்ளி நமூனாவினை **https://tntenders.gov.in** என்ற இணையதள முகவரியிலிருந்து இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். மேலும் ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த முழு விபரங்களும் பெறலாம்.

2. ஒப்பந்தப்புள்ளிகள் தொடர்பான நேரம் மற்றும் நாள்:

| | |
|---|---|
| **அ) ஒப்பந்தப்புள்ளி விபர முன் கூட்டம்** | **14.05.2025 முற்பகல் 11.00 மணி** |
| **ஆ) ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்தல்** | **20.05.2025 பிற்பகல் 3.00 மணி வரை** |
| **இ) ஒப்பந்தப்புள்ளி திறத்தல்** | **20.05.2025 பிற்பகல் 3.30 மணி** |

3) ஒப்பந்தப்புள்ளி பெறப்படும் நாளன்று அலுவலகத்திற்கு விடுமுறை தினமாக அறிவிக்கப்படின் அதற்கு அடுத்த வேலை நாளில் அதே நேரத்தில் அதே இடத்தில் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு திறக்கப்படும்.

4) ஒப்பந்தப்புள்ளியின் காலநீட்டிப்பு குறித்த அறிவிப்பு மற்றும் ஒப்பந்தப்புள்ளி இரத்து செய்யப்பட்டது உள்ளிட்ட விபரங்களை மேற்படி இணையதள முகவரியான https://tntenders.gov.in ல் அறிந்து கொள்ளலாம்.

**செயல் அலுவலர்**
**முதல் நிலை பேரூராட்சி**
**அச்சன்புதூர்- 627803 தென்காசி மாவட்டம்**

**செ.ம.தொ.இ./1950/ ஒப்பந்தப்புள்ளி / 2025**

தமிழ்நாடு அரசு

**வேடசந்தூர் (தேர்வுநிலை) பேரூராட்சி, திண்டுக்கல் மாவட்டம்**

**ந.க.எண்: 264 / 2025 / அ1** **ஒப்பந்தபுள்ளி அறிவிக்கை** **நாள். 28.04.2025**

**கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் (KNMT) 2025-2026**

| வ எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ (இலட்சத்தில்) | செலுத்த வேண்டிய முன் வைப்புத் தொகை (ரூபாயில்) 1 சதவீதம் | ஒப்பந்ததாரரின் தகுதி | வேலையை செய்து முடிக்க வேண்டிய காலம் (வேலை உத்தரவு தேதி முதல்) | ஒப்பந்தப்புள்ளி படிவம் மற்றும் டேவணித் தொகை செலுத்த வேண்டிய விபரம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | வேடசந்தூர் பேரூராட்சிக்குட்பட்ட 1வது வார்டு குமரன் நகர் தெற்கு தெரு-6, 1வது வார்டு வ.உ.சி.நகர் வடக்கு தெரு-1, 3வது வார்டு பாரதிநகர் கிழக்குத்தெரு 6, 13வது வார்டு கொங்குநகர் (ஆர்.டி.எம்.லாட்ஸ் அருகில்), 15வது வார்டு பழைய திண்டுக்கல் ரோட்டில் தார்சாலை அமைத்தல். (1.854 மீட்டர்) | **122.00** | **1,22,000 /-** | Class -I | **6 மாதங்கள்** | செயல் அலுவலர், வேடசந்தூர் பேரூராட்சி, ஐ.ஓ.பி.வங்கி, வேடசந்தூர் கிளை வங்கி கணக்கு எண். 023001000033623 IFS Code No. IOBA0000230 |
| | **மொத்தம்** | **122.00** | | | | |

வேடசந்தூர் தேர்வுநிலை பேரூராட்சி கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் (**KNMT**) 2025-2026 திட்டத்தில் மேற்கண்ட பணியினை மேற்கொள்ள தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

1) ஒப்பந்தப்புள்ளி சம்மந்தப்பட்ட நிபந்தனைகளை வேடசந்தூர் தேர்வுநிலை பேரூராட்சி அலுவலகத்தில், அலுவலக வேலை நாட்களில், அலுவலக வேலை நேரத்தில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

2) 05.05.2025 **ஆம் தேதி முதல்** 20.05.2025 **ஆம் தேதி முற்பகல் 11.00 மணி வரை** https://tntenders.gov.in என்ற இணையதளம் மூலமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

3) நிறைவு செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 20.05.2025 **பிற்பகல் 3.00 மணி வரை பெறப்படும்.**

4) பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 20.05.2025 **பிற்பகல் 3.30 மணிக்கு திறக்கப்படும்.**

5) பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் விலைவிபர ஒப்பந்தப்புள்ளிகள் 23.05.2025 **அன்று திறக்கப்படும்.**

6) செலுத்தப்பட வேண்டிய முன்வைப்பு தொகை "செயல் அலுவலர், வேடசந்தூர் பேரூராட்சி" என்ற பெயரில் மேலே பட்டியல் கண்ட வங்கி கணக்கிற்கு இணையதளம் மூலம் செலுத்தப்பட வேண்டும்.

**தலைவர்,**
**வேடசந்தூர் தேர்வு நிலை பேரூராட்சி,**
**திண்டுக்கல் மாவட்டம்**

**செ.ம.தொ.இ / 1980 / ஒப்பந்தப்புள்ளி / 2025**

**செயல் அலுவலர்,**
**வேடசந்தூர் தேர்வு நிலை பேரூராட்சி,**
**திண்டுக்கல் மாவட்டம்**

**HINDUJA HOUSING FINANCE LIMITED**

HINDUJA HOUSING FINANCE

Head Office: 167-169, 2nd Floor, Anna Salai, Little Mount, Saidapet, Chennai - 600015.
Branch Office: Zonal office: No.476, 2nd Floor, MTH Road, Krishnapuram, Ambattur, Chennai – 600 053.

## DEMAND NOTICE

**Notice under Section 13[2] of the Securitization and Reconstruction of Financial Assets and Enforcement of Security Interest Act, 2002**

NOTICE is hereby given that the following borrower/s who have availed loan from Hinduja Housing Finance Limited (HHFL) have failed to pay Equated Monthly Installments (EMIs) of their loan to HHFL and that their loan account has been classified as Non-performing Asset as per the guidelines issued by National Housing Bank. The borrower(s) have provided security of the immovable property/ies to HHFL, the details of which are described herein below. The details of the loan and the amounts outstanding and payable by the borrower/s to HHFL as on date are also indicated here below. The Borrower(s) as well as the public in general are hereby informed that the undersigned being the Authorized Officer of HHFL, the secured creditor has initiated action against the following borrower(s) under the provisions of the Securitization and Reconstruction of Financial Assets and enforcement of Security Interest Act, 2002 (the SARFAESI Act). If the following borrower(s) fail to repay the outstanding dues indicated against their names within 60 (Sixty) days of this notice, the undersigned will exercise any one or more of the powers conferred on the Secured Creditor under sub-section(4) of Section 13 of the SARFAESI Act, including power to take possession of the property/ies and sell the same. The public in general is advised not to deal with property/ies described here below.

**Branch: Chennai, Borrower: Mr. Vinoth Kumar. G, Co-Borrower: Mrs. Malar. G, both are residing at No.2/18, Sannathi Street, Theradi, Thiruvalangadu, Thiruvallur, Tamil Nadu -631210. Loan Account No. TN/KCP/TLLR/A000000274, NPA Date: 05.04.2025, Demand Notice Date: 24.04.2025, Outstanding Rs.6,48,620/- as on 24.04.2025.**
**Description of Property:** All that piece and parcel of land and building in Punjai Survey No.58/1, as per patta New Survey No.58/1C, an extent of 3 cents (1306.68 Square Feet), Situated at No.52, Pazhayanur Village, Tiruttani Taluk, Thiruvallur District, Thiruvalangadu Sub Registration District, Kancheepuram Registration District, Which is Bounded on the: North by: Anith's Land, South by: Battai, East by: Battai, West by: Lakshmi's Land.

**Branch: Chennai, Borrower: Mrs. Gowri. A, Co-Borrower: Mr. Arumugam. M, both are residing at No.22, Mettu Street, Sayavaram Post, Pudukandikai, Sayanavaram, Thiruvallur, Tamil Nadu, India – 631051. Loan Account No. TN/KCP/TLLR/A000000248, NPA Date: 05.04.2025, Demand Notice Date: 24.04.2025, Outstanding Rs.7,23,143/- as on 24.04.2025.**
**Description of Property:** All that Piece and Parcel of land building in Gramanatham Survey No.238/7, as per Patta New Survey No.238/7B an Extent of 3240 Square Feet in which an Extent of 535 Square Feet R.C.C tiled house, Situated at Sayinapuram Village, Arakkonam Taluk, Ranipet District, Nemili Sub Registration District, Arakkonam Registration District, Which is Bounded on:North by: Street, South by : Mariamman Koil Street, East by : Namachivayam House, West by :D. Arumugam Land.

If the said Borrowers shall fail to make payment to HHFL as aforesaid, HHFL shall proceed against the above secured assets under Section 13(4) of the Act and the applicable Rules, entirely at the risks of the said Borrowers as to the coast and consequences. The said Borrowers are prohibited under the provisions of section 13(3) of the said Act from transferring the aforesaid assets, whether by way of sale, lease or otherwise without the prior written consent of HHFL. Any person who contravenes or abets contravention of the provisions of the said Act or Rules made there under, shall be liable for imprisionment and/or penalty as provided under the Act.

**Date: 08.05.2025**
**Place: Chennai**

**Cluster Legal Manager, Authorised Officer,**
**For Hinduja Housing Finance Limited.**

**Contact Nos: RRM – Dinesh Babu. S – 9500096714 & RLM - Saravanabhavan. S- 9176664992.**

## MRF LIMITED

Regd. Office:114, Greams Road, Chennai 600 006
CIN: L25111TN1960PLC004306; Website: www.mrftyres.com, Email: mrfshare@mrfmail.com
Ph: 044-28292777, Fax: 28290562

**(₹ Crores)**

**STATEMENT OF AUDITED CONSOLIDATED FINANCIAL RESULTS FOR THE QUARTER AND YEAR ENDED 31ST MARCH, 2025**

| Sl No. | PARTICULARS | Quarter ended 31.03.2025 | Year ended 31.03.2025 | Quarter ended 31.03.2024 |
|---|---|---|---|---|
| | | Audited | Audited | Audited |
| 1 | Total Income from operations | 7,074.82 | 28,153.18 | 6,349.36 |
| 2 | Net Profit for the period (before Tax, Exceptional and/or Extraordinary items) | 660.73 | 2,479.00 | 527.34 |
| 3 | Net Profit for the period before tax (after Exceptional and/or Extraordinary items) | 660.73 | 2,479.00 | 527.34 |
| 4 | Net Profit for the period after tax (after Exceptional and/or Extraordinary items) | 512.11 | 1,869.29 | 396.11 |
| 5 | Total Comprehensive Income for the period [Comprising Profit for the period (after tax) and Other Comprehensive Income (after tax)] | 492.74 | 1,870.30 | 370.53 |
| 6 | Paid up Equity Share Capital | 4.24 | 4.24 | 4.24 |
| 7 | Other Equity | - | 18,484.22 | - |
| 8 | Earnings Per Share (of ₹10/- each) | | | |
| | 1. Basic (₹ Per share) | 1,207.48 | 4,407.51 | 933.97 |
| | 2. Diluted (₹ Per share) | 1,207.48 | 4,407.51 | 933.97 |

Key Audited Standalone Financial Information of the Company is as under :-

**(₹ Crores)**

| Sl No. | PARTICULARS | Quarter ended 31.03.2025 | Year ended 31.03.2025 | Quarter ended 31.03.2024 |
|---|---|---|---|---|
| | | Audited | Audited | Audited |
| 1 | Total Income from operations | 6,943.84 | 27,665.22 | 6,215.05 |
| 2 | Net Profit for the period before tax (after Exceptional items) | 645.08 | 2,419.90 | 507.91 |
| 3 | Net Profit for the period after tax (after Exceptional items) | 497.85 | 1,822.55 | 379.55 |

Note: a) The above financial results for the Quarter and Year ended 31st March, 2025 were reviewed by the Audit Committee and approved by the Board of Directors at its meeting held on 07th May, 2025.


b) The above is an extract of the detailed format of Quarter and Year ended 31st March, 2025 Financial Results filed with the Stock Exchanges under Regulation 33 and 52 of the SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015. The full format of the Quarter and Year ended 31st March, 2025 Financial Results (Consolidated/Standalone) are available on the websites of The Bombay Stock Exchange ("www.bseindia.com") and National Stock Exchange ("www.nseindia.com") & on the Company's website at (URL: www.mrftyres.com/financial-results). The Same can be accessed by scaning the QR Code provided below:

**For MRF LIMITED**

**Place: Chennai**
**Date: 07th May, 2025**

**RAHUL MAMMEN MAPPILLAI**
**Managing Director**
**DIN: 03325290**

Markets,
**Insight Out**



Markets, **Monday to Saturday**

To book your copy, sms **reachbs** to **57575** or email **order@bsmail.in**

Business Standard 50
Years of Insight

10 ஆயிரம் இந்திய மாணவர்கள் ரஷ்யாவில் மருத்துவம் படிக்க வாய்ப்பு; 200 பேருக்கு 100% கல்வி உதவித்தொகை

# சென்னையிலுள்ள ரஷ்ய பண்பாட்டு மையத்தில் மே 10,11 ந் தேதிகளில் ரஷ்ய கல்விக் கண்காட்சி

**ரஷ்ய தூதர் வாலெரி கோட்ஜெவ், இயக்குநர் அலெக்ஸாண்டர் டோடோநவ், ரவிச்சந்திரன் தகவல்**

சென்னை, மே 8–

**ரஷ்ய கல்விக் கண்காட்சி சென்னையில் 10,11, ந்தேதிகளில் நடைபெற உள்ள நிலையில், கோவையில் 13 ந்தேதியும், சேலத்தில் 14 ந்தேதியும் திருச்சியில் 15ந்தேதியும் மதுரையில் 16ந்தேதியும் நடைபெற உள்ளது.**

இது குறித்து, தென்னிந்தியாவுக்கான ரஷ்ய தூதர் வாலெரி கோட்ஜெவ், ரஷ்ய பண்பாட்டு மையத்தின் இயக்குநர் அலெக்ஸாண்டர் டோடோநவ், 'ஸ்டடி அப்ராட்' இயக்குநர் ரவிச்சந்திரன் ஆகியோர் கூட்டாக செய்தியாளர்களை சந்தித்து கூறியதாவது:–

202526 ஆம் கல்வியாண்டில் ரஷ்யாவில் உள்ள அரசு மருத்துவப் பல்கலைக்கழகங்கள், 10,000 க்கும் மேற்பட்ட மருத்துவ இடங்களை இந்திய மாணவர்களுக்கு வழங்க உள்ளது. இது கடந்த ஆண்டு 8,000 என்ற எண்ணிக்கையில் இருந்தது குறிப்பிடத்தக்கது. இந்திய தேசிய மருத்துவ ஆணையத்தின் (National Medical Commission) மாறிவரும் விதிமுறைகள் மற்றும் வழிகாட்டுதல்களை ரஷ்யப் பல்கலைக்கழகங்கள் ஏற்கெனவே கடைப்பிடித்து வருவதால், வெளிநாடுகளில் மருத்துவக் கல்வியை நாடும் இந்திய மாணவர்களுக்கு ரஷ்யாவே முதன்மையான தேர்வாக இருக்கிறது.




**பங்கேற்கும் பல்கலைக்கழகங்கள்**

இந்நிலையில், ரஷ்யாவின் புகழ்பெற்ற வோல்கோகிராட் மெடிக்கல் பல்கலைக்கழகம், இம்மானுவேல் காண்ட் பால்டிக் ஃபெடரல் பல்கலைக்கழகம், கசான் மாநில பல்கலைக்கழகம், தேசிய ஆராய்ச்சி நியூக்ளியர் பல்கலைக்கழகம், மாஸ்கோ ஸ்டேட் பிராந்திய பல்கலைக்கழகம் உள்ளிட்டவை தமிழ்நாட்டில் பங்கேற்கும் நேரடி கல்விக்கண்காட்சி சென்னை ஆழ்வார்ப்பேட்டை கஸ்தூரி ரங்கன் சாலையில் உள்ள ரஷ்ய பண்பாட்டு மையத்தில் மே 10,11 ந் தேதிகளில் நடைபெற உள்ளது. அங்கே தகுதி உள்ள மாணவர்கள் மருத்துவம், பொறியியல், தொழில்நுட்ப படிப்புகளுக்கு நேரடி அட்மிஷன் பெறலாம்.

சென்னையைத் தொடர்ந்து, மே 13ஆம் தேதி கோவை தி கிராண்ட் ரீஜெண்ட் ஓட்டலிலும், மே 14ந்தேதி சேலம் ஜி.ஆர்.டி. ஸைப் ஓட்டலிலும், மே 15ஆம் தேதி திருச்சி ஃபெமினா ஓட்டலிலும், மே 16ஆம் தேதி மதுரை ராயல் கோர்ட் ஓட்டலிலும் இந்தக் கண்காட்சி நடைபெறுகிறது.

தேசிய தகுதி நுழைவுத் தேர்வில் (NEET) தேர்ச்சி பெற்று, 12ஆம் வகுப்பில் முக்கிய பாடங்களில் குறைந்தபட்சம் 50% மதிப்பெண்கள் பெற்ற இந்திய மாணவர்கள் (எஸ்.சி./ எஸ்.டி. மற்றும் இதர பிற்படுத்தப்பட்ட மாணவர்களைப் பொறுத்தவரை, குறைந்தபட்ச மதிப்பெண்கள் 40% மட்டுமே), இளநிலை படிப்புகளுக்கு விண்ணப்பிக்கலாம். தமிழ் வழியில் படித்த மாணவர்களும் எம்.பி.பி. எஸ். / பி.இ. படிப்புகளுக்கு விண்ணப்பிக்கலாம். ரஷ்யாவில் உள்ள பல்கலைக்கழகங்களில் சேருவதற்கு சி.இ.டி. (CET), ஐ.இ.எல். டி.எஸ். (IELTS) போன்ற முன் தகுதித் தேர்வுகள் தேவை இல்லை" என்று தெரிவித்தனர்.

**200 பேருக்கு முழு உதவித்தொகை**

"கடந்த காலங்களைப் போலவே, ரஷ்ய அரசாங்கத்தின் வருடாந்திர உதவித்தொகை திட்டம் வழியாக இந்த ஆண்டும் 200 இந்திய மாணவர்களுக்கு 100% உதவித்தொகை வழங்கப்படும். இதன் மூலம் ரஷ்யாவின் முன்னணி பல்கலைக்கழகங்களில் இளநிலை, முதுநிலை, பட்ட மேற்படிப்புத் திட்டங்களை இலவசமாக அவர்கள் படிக்க முடியும். ரஷ்யாவில் உயர் கல்விக்கான செலவு ஒப்பீட்டளவில் குறைவு. ஏனென்றால் ரஷ்யக் கூட்டமைப்பு அரசாங்கத்தால் கல்விக்கு அதிக மானியம் வழங்கப்படுகிறது.

"ரஷ்யா முழுவதும் உள்ள 600க்கும் மேற்பட்ட அரசுப் பல்கலைக்கழகங்களில் 200 வெவ்வேறு நாடுகளைச் சேர்ந்த 3,00,000க்கும் மேற்பட்ட சர்வதேச மாணவர்கள் தற்போது படித்து வருகின்றனர். ரஷ்யாவில் உயர்கல்வியைத் தொடர விரும்பும் இந்திய மாணவர்களிடையே மருத்துவம் மிகவும் பிரபலமான படிப்பாக உள்ளது. தற்போது, 30 ரஷ்யப் பல்கலைக்கழகங்களில் சுமார் 25,000 இந்திய மாணவர்கள் மருத்துவம் படித்து வருகின்றனர். ஆண்டுக்கு ரூ.3 லட்சத்திலிருந்து மருத்துவ இளநிலை படிக்கும் வாய்ப்பு உள்ளது என்றும் கூறினர்.

இந்தச் செய்தியாளர் சந்திப்பில், வோல்கோகிராட் மாநில மருத்துவப் பல்கலைக்கழக சர்வதேச தொடர்புப் பிரிவின் தலைவர் நடாலியா அல்சுக் பங்கேற்றார்.



சென்னை அரசு மருத்துவக் கல்லூரியின் தலைமை அறுவை சிகிச்சைத் துறை பேராசிரியராக பணிபுரிந்து ஓய்வுபெற்ற பத்மஸ்ரீ டாக்டர் எம்.அகமது அலியின் 85 வது பிறந்த நாளை முன்னிட்டு, சேத்துப்பட்டு மேத்தா மருத்துவமனையில், டாக்டர் எஸ். அமுதகுமார் மற்றும் டாக்டர் அமிழ்தன் ஆகியோர் அவரை வாழ்த்தியதுடன், அவரிடம் வாழ்த்தும் பெற்றார்கள்.

# பரோடா வங்கியின் லாபம் ரூ.5048 கோடியாக உயர்வு

சென்னை, மே 8–

**பொதுத்துறையைச் சேர்ந்த பரோடா வங்கியின் வருவாய் கடந்த ஜனவரி – மார்ச் காலாண்டில் ரூ.35,852 கோடியாக அதிகரித்துள்ளது. நிகர லாபம் ரூ.5,048 கோடியாக உள்ளது. முந்தைய நிதியாண்டின் இதே காலாண்டோடு ஒப்பிடுகையில் இது 3% அதிகமாகும். நிகர லாபம் ரூ.4,886 கோடியாக இருந்தது.**

இது குறித்து வங்கி அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

மதிப்பீட்டுக் காலாண்டில் வங்கியின் மொத்த வருவாய் ரூ.33,775 கோடியிலிருந்து அதிகரித்து ரூ.35,852 கோடியாக உள்ளது. கடந்த நிதியாண்டின் 4வது காலாண்டில் ரூ.29,583 கோடியாக இருந்த வட்டி வருவாய் நடப்பு நிதியாண்டின் அதே காலாண்டில் ரூ.30,642 கோடியாக உயர்ந்துள்ளது.

ஓராண்டுக்கு முன்னர் 0.68%ஆக இருந்த நிகர வராக்கடன் விகிதம் கடந்த மார்ச் இறுதியில் 0.58%ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. 2024–25ஆம் நிதியாண்டு முழுதும் நிகர லாபம் ரூ.19,581 கோடியாக உள்ளது. கடந்த நிதியாண்டோடு ஒப்பிடுகையில் இது 10% அதிகமாகும். அப்போது நிகர லாபம் ரூ.17,789 கோடியாக இருந்தது. இதே காலக்கட்டத்தில் மொத்த வருவாய் ரூ.127,101 கோடியிலிருந்து ரூ.1,38,089 கோடியாக உயர்ந்துள்ளது.

இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# அழகு பராமரிப்புக்கு போயஸ் தோட்டத்தில் ‘‘பயோரிவைவ்’’ நவீன சிகிச்சை மையம் திறப்பு

சென்னை, மே 8–

**சென்னையில் பூரண அழகு மற்றும் ஆரோக்கியத்திற்கான ஒரு புதிய அதிநவீன மையம் பயோரிவைவ், போயஸ் தோட்டத்தில் திறக்கப்பட்டது. இந்த மையத்தில் மேம்பட்ட தொழில்நுட்பமுடன் கூடிய, அதிநவீன சிகிச்சைகள் மற்றும் அழகு பராமரிப்பு உபகரணங்கள் ஒரே கூரையின் கீழ் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.**

மருத்துவர், தொழில்முனைவோர் டாக்டர் ஐஸ்வர்யா செல்வராஜின் புதிய முயற்சி பயோரிவைவ். ‘அழகு என்பது உடல் மற்றும் மனதின் சமநிலையில் தான் தொடங்குகிறது’ என்பதில் ஆழ்ந்த நம்பிக்கை உடையவர் இவர். ஆல்மா சாப்ரானோ டைட்டானியம் லேசர், ஹாலிவுட் ஸ்பெக்ட்ரா லேசர் போன்ற அதிநவீன அழகு மற்றும் சீரமைப்பு தொழில்நுட்பங்களை தமிழ்நாட்டில் முதன்முறையாக அறிமுகப்படுத்திய பெருமை டாக்டர் செல்வராஜை சேரும். மேலும், இந்தியாவின் முதன்முறையாக மற்றும் ‘சார்க்’ பிராந்தியத்தில் முதன்முறையாக அல்மா பிரைமெக்ஸ் நவீன சிகிச்சை மையம் கொண்டு வந்தவரும் அவரே. இந்நிலையில், பயோரிவைவ் என்பது தோல் சிகிச்சை மட்டுமல்லாமல், உடல் மற்றும் உள்ளார்ந்த ஆரோக்கியத்தை மேம்படுத்தும் ஒரு மாற்றத்தைக் கொண்டு வருவதை நோக்கமாகக் கொண்டுள்ளது என்றும் அவர் விவரித்தார்.



மலைகா அரோரா சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். ‘ஆரோக்கியமான வாழ்வு என்பது ஓர் ஆடம்பரம் அல்ல; அது ஒரு வாழ்க்கை முறை’ என்று உரையாற்றினார்.

இந்தியாவில் முதன்முறையாக, தோல் பிரகாசம் மற்றும் புத்துணர்வு பெற ஹாலிவுட் ஸ்பெக்ட்ரா லேசர், வலியற்ற லேசர் முடி அகற்றல் போன்ற அதி நவீன சிகிச்சை வழங்கப்படுகிறது.

உடல் உஷ்ணத்தை குறைத்து, நோய் எதிர்ப்பு சக்தியை மேம்படுத்தி, ஹார்மோன்களை சமநிலைப்படுத்தி, தோல் ஆரோக்கியத்தை உயர்த்தும் நோக்கத்தில் சிகிச்சைகள் வழங்கப்படுகிறது. முன்னணி மருத்துவர்கள் 4 பேர் மற்றும் ஒரு சிறந்த பிளாஸ்டிக் சர்ஜன் கொண்ட மருத்துவர் குழு சிகிச்சை அளிக்கிறது.

இந்த விழாவில் நிறுவனர் டாக்டர் ஐஸ்வர்யா செல்வராஜ், மலைக்கா அரோரா, பிந்தியா தள்ளூரி பங்கேற்றனர்.

# திருக்கழுக்குன்றம் வேதகிரீஸ்வரர் கோவில் தேரோட்டம்

திருக்கழுக்குன்றம், மே 8–

செங்கல்பட்டு மாவட்டம் திருக்கழுக்குன்றம் வேதகிரீஸ்வரர் உடனுறை திரிபுரசுந்தரி அம்மன் கோவில் தொன்மை வாய்ந்த கோவிலாகும். இந்த ஆண்டுக்கான சித்திரை திருவிழா கடந்த 1ந் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கிய நிலையில் முக்கிய திருவிழாவான தேரோட்டம் நேற்று நடைபெற்றது. தேரோட்டத்தை செங்கல்பட்டு கலெக்டர் ச.அருண்ராஜ் வடம் பிடித்து துவக்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து விநாயகர் தேர் முதலில் செல்ல வேதகிரீஸ்வரர் தேர், திரிபுரசுந்தரி அம்பாள் தேர், முருகர், வள்ளி தெய்வானை தேர், சண்டிகேஸ்வரர் தேர் என தொடர்ந்து பஞ்ச மூர்த்தி தேர்களும் பஞ்சவாத்தியங்கள் முழுங்க நான்கு மாடவீதிகளை சுற்றி வந்தது.




## எம்ஆர்எஃப் லிமிடெட்

பதிவு அலுவலகம்: 114, கிரீம்ஸ் சாலை, சென்னை 600 006.
CIN : L25111TN1960PLC004306; Website: www.mrftyres.com; Email: mrfshare@mrfmail.com; Ph: 044-28292777, Fax: 28290562

(₹ கோடியில்)

31, மார்ச் 2025 அன்று உடன் முடிவடைந்த காலாண்டு மற்றும் முடிந்த ஆண்டிற்கான ஒருங்கிணைக்கப்பட்ட தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கை

| வ. எண். | விபரங்கள் | 31.03.2025 அன்று முடிந்த காலாண்டு | 31.03.2025 அன்று முடிந்த ஆண்டு | 31.03.2024 அன்று முடிந்த காலாண்டு |
|---|---|---|---|---|
| | | தணிக்கை செய்யப்பட்டது | தணிக்கை செய்யப்பட்டது | தணிக்கை செய்யப்பட்டது |
| 1 | செயல்பாடுகளிலிருந்தான மொத்த வருமானம் | 7,074.82 | 28,153.18 | 6,349.36 |
| 2 | இக்காலத்திற்கான நிகர இலாபம் (வரிக்கு முந்தையது, விதிவிலக்கான மற்றும் / அல்லது அசாதாரண இனங்கள்) | 660.73 | 2,479.00 | 527.34 |
| 3 | வரிக்கு முந்தைய இக்காலத்திற்கான நிகர இலாபம் (விதிவிலக்கான மற்றும் / அல்லது அசாதாரண இனங்களுக்கு பிற்பட்டது) | 660.73 | 2,479.00 | 527.34 |
| 4 | வரிக்கு பின்னரான இக்காலத்திற்கான நிகர இலாபம் (விதிவிலக்கான மற்றும் / அல்லது அசாதாரண இனங்களுக்கு பிற்பட்டது) | 512.11 | 1,869.29 | 396.11 |
| 5 | இக்காலத்திற்கான மொத்த முழுமையான வருமானம் (இதில் இக்காலத்திற்கான இலாபம் (வரிக்கு பிந்தையது) மற்றும் இதர முழுமையான வருமானத்தை (வரிக்கு பிந்தையது) உள்ளடக்கியது | 492.74 | 1,870.30 | 370.53 |
| 6 | முழுவதும் செலுத்தப்பட்ட சம பங்கு மூலதனம் | 4.24 | 4.24 | 4.24 |
| 7 | மற்ற சம பங்கு | - | 18,484.22 | - |
| 8 | பங்கு ஒன்றுக்கு வருமானம் (ஒவ்வொன்றும் ₹10/-) | | | |
| | 1. அடிப்படை (பங்கு ஒன்றுக்கு ₹) | 1,207.48 | 4,407.51 | 933.97 |
| | 2. நீர்க்கப்பட்டது (பங்கு ஒன்றுக்கு ₹) | 1,207.48 | 4,407.51 | 933.97 |

நிறுவனத்தின் முக்கிய தணிக்கை செய்யப்பபட்ட, ஒருங்கிணைக்கப்படாத நிதி தகவல்கள் கீழ்வருமாறு: (₹ கோடியில்)

| வ. எண். | விபரங்கள் | 31.03.2025 அன்று முடிந்த காலாண்டு | 31.03.2025அன்று முடிந்த ஆண்டு | 31.03.2024 அன்று முடிந்த காலாண்டு |
|---|---|---|---|---|
| | | தணிக்கை செய்யப்பட்டது | தணிக்கை செய்யப்பட்டது | தணிக்கை செய்யப்பட்டது |
| 1 | செயல்பாடுகளிலிருந்தான மொத்த வருமானம் | 6,943.84 | 27,665.22 | 6,215.05 |
| 2 | இக்காலத்திற்கான நிகர இலாபம் வரிக்கு முந்தையது (விதிவிலக்கான இனங்களுக்கு பிற்பட்டது) | 645.08 | 2,419.90 | 507.91 |
| 3 | வரிக்கு பிந்தைய இக்காலத்திற்கான நிகர இலாபம் (விதிவிலக்கான இனங்களுக்கு பிற்பட்டது) | 497.85 | 1,822.55 | 379.55 |

குறிப்பு: அ) 31, மார்ச் 2025 அன்று முடிந்த காலாண்டு மற்றும் முடிந்த ஆண்டிற்கான மேற்கண்ட நிதிநிலை அறிக்கையானது 07, மே 2025 தணிக்கை குழுவினரால் மறுஆய்வு செய்யப்பட்டு அன்று நடைபெற்ற இயக்குநர்கள் குழும கூட்டத்தில் ஒப்புதல் பெறப்பட்டது.

ஆ) மேற்கண்டவை SEBI (Listing Obligations and disclosure Requirements) Regulations, 2015-ன் ஒழுங்குமுறை 33-ன் மற்றும் 52-ன் கீழ் பங்குச்சந்தைகளில் பதிவு செய்யப்பட்ட 31, மார்ச் 2025 அன்று முடிந்த காலாண்டு மற்றும் முடிந்த ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை முடிவுகளின் விளக்கமான படிவத்தின் சாராம்சமாகும். 31, மார்ச் 2025 அன்று முடிந்த காலாண்டு மற்றும் முடிந்த ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின் (ஒருங்கிணைக்கப்பட்ட / ஒருங்கிணைக்கப்படாத) முழு படிவமும் மும்பை பங்குச்சந்தை (www.bseindia.com) மற்றும் தேசிய பங்குச்சந்தை (www.nseindia.com) மற்றும் (URL: www.mrftyres.com/financial-results) என்ற நிறுவனத்தின் இணையதளத்திலும் கிடைக்கப்பெறலாம். கீழே கொடுக்கப்பட்டுள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்வதன் மூலம் இதை அணுகலாம்:

இடம்: சென்னை
தேதி : 07 மே, 2025

எம்ஆர்எஃப் லிமிடெட்டுக்காக
ராகுல் மாம்மென் மாப்பிள்ளை
நிர்வாக இயக்குனர்
DIN: 03325290


# தமிழ் வில்லன் நடிகர் சம்பத்ராமுக்கு மலையாள சினிமாவில் விருது

சென்னை, மே 8–

**தமிழில் வளர்ந்து வரும் இளம் வில்லன் நடிகர் சம்பத்ராமுக்கு (வயது 54), மலையாளத்தில் சிறந்த வில்லன் நடிகருக்கான விருது வழங்கப்பட்டுள்ளது.**

படங்களில் சின்னச்சின்ன கதாபாத்திரம் என்றாலும், முகமலர்ச்சியுடன் ஏற்று, சிரத்தையாக நடித்து, அனைவரின் பாராட்டுக்களைப் பெற்று வருபவர் இவர். தமிழ் சினிமாவில் 25 ஆண்டுகளுக்கு மேலாக நடித்து கொண்டிருப்பவர், பெரும்பாலும் வில்லன் வேடங்களில் நடித்து பாராட்டுக்களைப் பெற்று வருபவர்.

தற்போது தமிழ் மட்டுமன்றி தெலுங்கு, மலையாளம், கன்னடம் என்று பல மொழிகளில் மட்டுமல்ல பான் இந்தியா படங்களின் நடிகராகவும் வெற்றி வலம் வருகிறார்.

இந்நிலையில், திரையுலகம் மற்றும் எழுத்துலகில் சிறந்து விளங்கும் கலைஞர்களுக்கு விருது வழங்கி கவுரவித்து வரும் மலையாள புரஷ்காரம் சமிதி, நடிகர் திலீப் நடித்த ‘தங்கமணி’ என்ற மலையாளத் திரைப்படத்தில் முக்கிய வில்லனாக நடித்த சம்பத் ராமுக்கு, சிறந்த வில்லன் நடிகருக்கான ‘மலையாள புரஷ்காரம் 1200’ விருது வழங்கி கவுரவித்துள்ளது.

கேரளாவின் கவுரவம் மிக்க விருதுகளில் ஒன்றான இவ்விருதுக்குரியவர்களை அம்மாநில பத்திரிகையாளர்கள், கலை மற்றும் கலாசாரத்தை வளர்ப்பதற்கான முயற்சிகளை முன்னெடுக்கும் எழுத்தாளர்கள் குழு தேர்வு செய்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

இது குறித்து சம்பத்ராம் கூறுகையில், “பெரிய நடிகர்களின் படங்களில் முக்கிய வில்லனாக நடிக்க வேண்டும் என்பது எனது நீண்ட நாள் கனவு. அதற்காக நான் பல வருடங்களாக கடுமையாக உழைத்தாலும், தமிழில் அப்படி ஒரு வாய்ப்பு இதுவரை எனக்கு கிடைக்கவில்லை. நிச்சயம் அந்த இலக்கை அடைவேன். எனக்கான அங்கீகாரம் பெறுவேன்'' என்றார் பெருமிதத்தோடும் மகிழ்ச்சியோடும்.

போலீஸ் 1999ல் ‘முதல்வன்’ (ஷங்கர் இயக்கம்) படத்தில் (சப்இன்ஸ்பெக்டராக) அறிமுகமானார். தீனா, திமுரு புடிச்சவன், காஞ்சனா (அகோரி வேடம்), திட்றோம் தூக்கறோம்... உள்பட இதுவரை 200க்கும் மேற்பட்ட படங்களில் நடித்திருக்கிறார். 200வது படம் : ‘காசாகாசா’.


## அவலோன் டெக்னாலஜிஸ் லிமிடெட்

(முன்னர் அவலோன் டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட் என்று அழைக்கப்பட்டது)
CIN:L30007TN1999PLC043479
பதிவு அலுவலகம்: B-7 முதல் பிரதான சாலை, MEPZ-SEZ, தாம்பரம் சென்னை, 600045 தமிழ்நாடு, இந்தியா / இணையதளம் : https://www.avalontec.com

**அவலோன் டெக்னாலஜிஸ் லிமிடெட்டின் 31 மார்ச், 2025–ல் முடிந்த காலாண்டு மற்றும் ஆண்டுக்கான தனியான மற்றும் ஒருங்கிணைந்த நிதிநிலை முடிவுகள்**

(ரூ. மில்லியனில்)

| வ. எண். | விவரங்கள் | தனியானது | | | | | ஒருங்கிணைந்தது | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | முடிந்த காலாண்டு | | | முடிந்த ஆண்டு | | முடிந்த காலாண்டு | | | முடிந்த ஆண்டு | |
| | | மார்ச் 31, 2025 (தணிக்கை செய்தது) | டிசம்பர் 31, 2024 (தணிக்கை செய்யாதது) | மார்ச் 31, 2024 (தணிக்கை செய்தது) | மார்ச் 31, 2025 (தணிக்கை செய்தது) | மார்ச் 31, 2024 (தணிக்கை செய்தது) | மார்ச் 31, 2025 (தணிக்கை செய்தது) | டிசம்பர் 31, 2024 (தணிக்கை செய்யாதது) | மார்ச் 31, 2024 (தணிக்கை செய்தது) | மார்ச் 31, 2025 (தணிக்கை செய்தது) | மார்ச் 31, 2024 (தணிக்கை செய்தது) |
| 1 | செயல்பாடுகள் மூலம் மொத்த வருவாய் | 2,020.74 | 1,513.98 | 1,110.58 | 6,317.79 | 4,416.82 | 3,427.87 | 2,808.51 | 2,168.10 | 10,981.28 | 8,671.68 |
| 2 | மொத்த வருவாய் | 2,075.07 | 1,641.70 | 1,157.05 | 6,587.44 | 4,609.24 | 3,459.64 | 2,908.17 | 2,195.47 | 11,152.34 | 8,819.74 |
| 3 | காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (வரி, விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு முன்) | 240.03 | 220.58 | 48.25 | 671.50 | 432.59 | 325.74 | 327.16 | 99.43 | 867.13 | 380.55 |
| 4 | வரிக்கு முன் காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின்) | 240.03 | 220.58 | 48.25 | 671.50 | 432.59 | 325.74 | 327.16 | 99.43 | 867.13 | 380.55 |
| 5 | வரிக்கு பின் காலத்திற்கான நிகர லாபம் /(நஷ்டம்) (விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின்) | 184.67 | 164.75 | 37.72 | 505.70 | 324.86 | 242.77 | 239.89 | 70.62 | 634.39 | 279.85 |
| 6 | காலத்திற்கான மொத்த பரிபூரண வருமானம் (காலத்திற்கான லாபம்/(நஷ்டம்) (வரிக்கு பின்) மற்றும் இதர பரிபூரண வருமானத்தை (வரிக்கு பின்) உள்ளடக்கியது) | 187.99 | 163.28 | 41.30 | 504.61 | 325.77 | 250.08 | 224.28 | 70.41 | 617.27 | 267.22 |
| 7 | சமபங்கு மூலதனம் | 132.31 | 132.30 | 131.43 | 132.31 | 131.43 | 132.31 | 132.30 | 131.43 | 132.31 | 131.43 |
| 8 | இருப்புகள் (மறுமதிப்பீட்டு கையிருப்பு தவிர்த்து) கடந்த ஆண்டு தணிக்கை செய்யப்பட்ட இருப்புநிலைக் குறிப்பில் காட்டப்பட்டுள்ளபடி | | | | 7,128.78 | 6,600.26 | | | | 5,983.16 | 5,341.98 |
| 9 | தொடரும் மற்றும் நிறுத்தப்பட்ட செயல்பாடுகளுக்கான ஒரு பங்கு சம்பாத்தியம் (முக மதிப்பு ஒவ்வொன்றும் ரூ.2/– ) | | | | | | | | | | |
| | அடிப்படை (ரூ.) | 2.79 | 2.49 | 0.57 | 7.67 | 4.98 | 3.67 | 3.63 | 1.08 | 9.62 | 4.29 |
| | பலமிழந்தது (ரூ.) | 2.76 | 2.46 | 0.56 | 7.56 | 4.87 | 3.63 | 3.58 | 1.05 | 9.48 | 4.19 |

குறிப்பு
1. மேலே உள்ளவை செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015, விதி 33ன் கீழ் நேஷனல் ஸ்டாக் எக்சேஞ்ச் ஆஃப் இந்தியா லிமிடெட் ("என்எஸ்இ") மற்றும் பாம்பே ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச் லிமிடெட் ("பிஎஸ்இ") ஆகியவற்றில் தாக்கல் செய்யப்பட்ட மார்ச் 31, 2025 அன்று முடிவடைந்த காலாண்டு மற்றும் நிதி ஆண்டுக்கான நிதி முடிவுகளின் விரிவான வடிவத்தின் சுருக்கமாகும்.
2. மார்ச் 31, 2025–ல் முடிவடைந்த காலாண்டு மற்றும் நிதி ஆண்டுக்கான முழு நிதிநிலை முடிவுகள் www.bse.com/ www.nse.com மற்றும் நிறுவனத்தின் இணையதளமான www.avalontec.com–ல் கிடைக்கும்.
3. மார்ச் 31, 2025–ல் முடிவடைந்த காலாண்டு மற்றும் நிதி ஆண்டிற்கான தனியான மற்றும் ஒருங்கிணைந்த நிதி முடிவுகள், தணிக்கைக் குழுவால் அவர்களின் கூட்டத்தில் மதிப்பாய்வு செய்யப்பட்டு, மே 06, 2025 அன்று நடைபெற்ற கூட்டத்தில், நிறுவனத்தின் இயக்குனர்கள் குழுவால் அங்கீகரிக்கப்பட்டது.

விவரங்களுக்கு க்யூஆர் குறியீட்டை ஸ்கேன் செய்யவும்

இடம்: சென்னை
தேதி : மே 06, 2025

அவலோன் டெக்னாலஜிஸ் லிமிடெட்
ஒப்பம்/–
குன்ஹமேட் பிச்சா
சேர்மன் மற்றும் நிர்வாக இயக்குனர்
DIN : 00819707